படையில் செய்வதில்லை. ஆனால் ஆசிரியர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கச் செய்யப்படும் மாறுதல்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நாமக்கல்லிலே கே. பி. இராமசாமி என்ற போஸ்ட் கிராஜுவேட் தமிழாசிரியர் பணியாற்றினார். அவருடைய மனைவியும் அங்கே ஒரு இடம் காலியாக இருந்ததால், ஆத்தூரிலிருந்து மாற்றப்பட்டார். அவரும் போஸ்ட் கிராஜுவேட் தமிழாசிரியை. ஆனால் திடீரென்று ஒரு 15 நாட்களுக்குள், மாற்றிவிடுவோம் என்று ஒரு பகுதியினர் சென்னைக்கு வந்தார்கள். இரண்டு பேரையும் தூக்கி வேறு எங்கேயோ ஆத்தூர் பக்கத்திலே எறிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சில காரியங்கள் நடக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பது தர்மம்தானா? அப்படிப் பட்டவைகள் அரசின் கவனத்திற்கு வரும்போது, அந்தக் குறைகளை நீக்கம் செய்ய வேண்டாமா? அதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

பள்ளிகளில் முறை மாற்றுமுறை.

*114 வினா—திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், உதகமண்டலம், பெரியார் மாவட்டங்களில் போதிய வகுப்பறைகள் இல்லாததால், ஷிப்டு முறையில் (Shift System) நடக்கும் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள், அரசினர் மற்றும் தனியார் பள்ளிகள் மாவட்ட வாரியாக எவ்வளவு?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) சேலம், தருமபுரி, கோவை, உதகமண்டலம் மாவட்டங்களிலே முறையே 1, 3, 5, 6 அரசினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும், கோவை மாவட்டத்தில் நான்கு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் போதிய வகுப்பறைகள் இல்லாததால், ஷிப்டு முறையில் வகுப்புகள் நடக்கின்றன. பெரியார் மாவட்டத்தில் ஷிப்டு முறையில் நடத்தும் பள்ளிகள் ஒன்றுமில்லை.

(இ) மேற்படி பள்ளிகளில் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் மற்றும் நன்கொடையாளர்கள் மூலம் கட்டிடம் கட்டுவதற்கும் சில கட்டிடங்கள் புதுப்பித்தும் வகுப்பு அறைகளை சீர்ப்படுத்தியும் பள்ளிக்குக் கூடுதல் இட வசதியை ஏற்படுத்தும்படியும், 'ஷிப்டு' முறையில் பள்ளியை நடத்துவதை கூடிய விரைவில் கைவிடும்படியும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஷிப்டு முறைகளைப் பொறுத்தவரையில், நகரப் பள்ளிகளிலே வேண்டுமானால் அந்தப் பிள்ளைகளினுடைய தன்மைகள், சூழ்நிலைகள் சரியாக இருக்கலாம். ஆனால் கிராமங்களைப் பொறுத்தவரையில், ஷிப்டு முறையினால் குழந்தைகளுடைய கல்வி பாதிக்கப்படுகின்றது என்பது—நான் அங்கு சென்ற போது—பெற்றோர்களுடைய குறைபாடும், மாணவர்களுடைய எண்ணமும் கூட. அது மட்டுமல்ல, கிராமப் பகுதிகளிலே அரசு உடனடியாகக் கொஞ்சம் கவனம் செலுத்தி, அந்த ஷிப்டு முறைகளை உடனடியாக மாற்றி அமைத்தால்தான், அவர்களுக்குப் போதுமான ஐந்து மணி நேரம் கல்வி கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆதலால் அதை முன்னின்று பெற்றோர்–ஆசிரியர்கள், பெற்றோர்கள் சங்கம் செய்வதோடு அரசும் கவனம் செலுத்தி அந்தச் சில பள்ளிகளிலும் மாற்றி அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.